## சீர்ப்படுத்துவார்

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக. (1 பேதுரு 5:10)**




நம் வாழ்க்கையில் நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும், மாம்சத்திலும் சோர்ந்து போகும் பொழுது, பாடு அனுபவிக்கும் பொழுது, பல்வேறு குழப்பமான சூழ்நிலைகளில் செல்லும்பொழுது, பொல்லாத மனிதர்களின் மூலமாய் காயப்படும் போது, எதிர்பாராத வியாதி வேதனைகளுக்கு ஊடாக செல்லும் பொழுது, நம்முடைய விசுவாச வாழ்க்கையும், ஆண்டவருக்குள்ளான பக்தி வைராக்கியமான வாழ்க்கையும், அவருக்கே கீழ்ப்படிந்து அவரை மாத்திரமே சார்ந்து வாழ்கிற வாழ்க்கையும் சற்று நிலை தடுமாறுகிறது. இதற்கு காரணம் மேற்கண்ட வசனத்திற்கு முந்தைய இரண்டு வசனங்களில் கூறப்பட்டுள்ளது. **1 பேதுரு 5:8,9** வசனங்கள் இவ்வாறு கூறுகிறது

**"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே."**. இங்கு பிசாசானவன், நம் வாழ்க்கையில் இப்படிப்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகளை கொண்டு வருகிறான் என்றும், விசுவாசத்தில் உறுதியாக இருந்து அவனுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்றும் வேதம் நமக்கு அறிவுரை கூறுகிறது. மேலும் உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறது என்று கூறப்பட்டுள்ளது. ஆம், நாம் மாத்திரம் இந்த விசுவாச போராட்டத்தில் தனியாய் இருக்க வில்லை, தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரும் இப்படி பட்ட பாடுகள் ஊடாகக் கடந்து செல்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் சத்துருவாகிய பிசாசானவன் நம் வாழ்க்கையில் பல்வேறு விதங்களில் தேவையில்லாத பிரச்சினைகளை கொண்டு வருகிறான். நம் சொந்த குடும்பத்தில், ஊழியத்தில், பணி செய்யும் இடத்தில், குடும்ப உறவினர் மத்தியில், சமுதாயத்தில் என பல்வேறு நிலைகளில் பல்வேறு காரணங்களுக்காக பாடுகள் உண்டாகிறது. அவற்றின் ஊடாக நாம் கடந்து செல்லும் பொழுது, சில நேரங்களில் நாம் தேவ உறவு, தேவ ஐக்கியம் தேவனை சார்ந்திருத்தல் ஆகியவற்றை இழந்து போகிறோம். அப்பாடுகள், பிரச்சினைகள் பற்றி நினைத்து, நிகழ்கால வாழ்க்கையில் செய்ய வேண்டியவற்றை செய்ய முடியாமல் போகிறோம். சில நேரங்களில் ஊழியப் பாதையில் ஏற்படும் சோர்வுகள் குடும்பத்தை கவனிக்க முடியாமல், பல காரியங்களை திட்டமிட்டு செய்ய முடியாமல், சொந்த உடல் நலத்தை கூட கவனிக்க முடியாமல், நம்மை சோர்வடைய செய்கிறது. அப்படியே வேலை ஸ்தலத்தில் உண்டாகிற பாடுகள் வீட்டில் ஏற்படும் பிரச்சினைகள் என ஒன்று மற்றொன்றை பாதித்து இறுதியில் நாம் எதையும் செய்ய முடியாமல் சோர்ந்து போய் அமர்ந்து விடுகிறோம். சத்துருவானவன் மிகவும் தந்திரமாக ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் வஞ்சிக்க பார்க்கிறான். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படும் பொழுது தேவனுடைய பெரிதான கிருபை நமக்குத் தேவையாய் இருக்கிறது. **1 பேதுரு 5:10** வசனம் ஆண்டவர் எவ்வாறு இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து நம்மை தப்பிக்கிறார் என்பதை விளக்குகிறது. அவற்றை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

(i) **நித்திய மகிமை**: வசனம் சொல்கிறது ஆண்டவர் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்திருக்கிறார் என்று. எனவே நமது முடிவு ஏதோ இந்த பாடுகளோடு அழிந்து போக போவதில்லை. அது நித்திய நித்தியமாய் கிறிஸ்துவுக்குள் மகிமையோடு வாழ இருக்கிறது. எனவே எப்படிப்பட்ட சூழ்நிலை தற்போது இருந்தாலும் அது நம் வாழ்க்கையின் முடிவல்ல, நித்திய மகிமையே நம்முடைய முடிவு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

(ii) **சகல கிருபையும் பொருந்திய தேவன்**: ஆம் அன்று அப்போஸ்தலனாகிய பவுல் தான் அனுபவித்த வேதனையின் மத்தியில் ஆண்டவரை நோக்கி கூப்பிட்ட பொழுது அவருக்கு கிடைத்த மறுமொழி **"என் கிருபை உனக்குப் போதும்" (2 கொ 12:9)** என்பதே. அவர் கிருபை நமக்கு போதும். எப்படிப்பட்ட சூழ்நிலையையும், சகல கிருபையும் பொருந்திய தேவன் அதை கடந்து வர உதவி செய்வார்.

(iii) **கொஞ்சகாலம் பாடனுபவித்தல்**: நாம் ஏற்கனவே கண்டபடி இந்தப் பாடுகள் நமக்கு அனுமதிக்கப்பட்டு இருந்தாலும் அவற்றினால் நாம் சேதப்படுவதில்லை. தேவ கிருபை நம்மை காக்கும். அதே நேரத்தில் வெகு சீக்கிரமாக இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு உண்டாகும். இவ்வுலகில் இப்பொழுது நடக்கும் அநீதியை நாம் காணும் பொழுது உண்மைக்கு மதிப்பில்லாதது போல, பொய்யும் பித்தலாட்டமும் தேவனுக்கு எதிரான

காரியங்களும் ஜெயிப்பது போல, வல்லமை கொள்வது போல காணப்பட்டாலும், இவை எல்லாம் எங்கு போய் முடியுமோ என்று கூட நாம் கவலைப்படலாம், ஆனால் சர்வலோக நியாயதிபதியாய் இருக்கிற கர்த்தராகிய தேவன் சீக்கிரமாய் நியாயம் செய்வார். எனவே **"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று" (ரோ 8:18)** வேதம் கூறுகிறது. மேலும் நம் வாழ்க்கையில் ஆண்டவர் பல்வேறு விதங்களில் மாற்றங்களைக் கொண்டு வருகிறார் அவற்றை ஒவ்வொன்றாக பின்வருமாறு காண்போம்.

(a) **சீர்ப்படுத்தி**: ஆம் சில வேளைகளில் நம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பாடுகள், துக்கங்கள், நம் ஆவி ஆத்துமா சரீரத்தை சீரழித்து விடுகிறது. நம் வாழ்க்கை நமக்கே பிரியம் இல்லாமல் போகிறது. விசுவாச ஜீவியத்தில் தடுமாறுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் முதலாவது நம்மை சீர்ப்படுத்துகிறார். ஏனோதானோ என்று செல்லும் நம் விசுவாச வாழ்க்கையை சீர்ப்படுத்துகிறார்

(b) **ஸ்திரப்படுத்தி**: இரண்டாவதாக நம்மை ஸ்திரப்படுத்துகிறார். நம் வாழ்க்கையில், நாம் சீரான பாதைக்கு வந்தவுடன் அதில் ஸ்திரமுடன் நிற்க பெலன் தருகிறார். ஒருவேளை பிரச்சனைகள் அப்படியே இருக்கலாம், பாடுகள் அப்படியே இருக்கலாம், அவரோ நம்மை அதன் மத்தியிலும் ஸ்திரப்படுத்தி சோர்ந்து போகாது இருக்க செய்கிறார். அப்பொழுது நம் மூலமாய் நம்மை சார்ந்து இருப்பவர்களும் ஸ்திரப்படுவர். பாடுகளினால் உண்டாகும் எதுவும் நம் வாழ்க்கை ஓட்டத்தை பாதிக்காது.

(c) **பலப்படுத்தி**: மூன்றாவது, **"என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொ 12:9)** என்று அப்போஸ்தலனாகிய பவுலுக்கு செல்லப்பட்டது போல, ஆண்டவருடைய கிருபை நம்மை ஸ்திரப்படுத்தும், அதேவேளையில் பாடுகளினால் உண்டாகிய பலவீனத்தால், நம் ஆவி ஆத்மா மற்றும் சரீரம் பலவீனப்படும் பொழுது, ஆண்டவருடைய பெலன் பூரணமாய் நம் மேல் விளங்கும், நம்மை பலப்படுத்தும், பெலனடையச்செய்யும்.

(d) **நிலை நிறுத்துவார்**: இறுதியாக நாம் நம்முடைய பாடுகள் மத்தியிலும், சீர் படுத்தப்பட்டு அதனால் உண்டாகிய ஸ்திரத்தினால் பலப்பட்டு, நம் வாழ்க்கை ஓட்டத்தை இவ்வுலகில் தொடர்ந்து ஓடும் பொழுது, நாம் தேவனால் நிலை நிறுத்தப்பட்டு, நித்திய மகிமைக்குள் பிரவேசிக்கும் வரைக்கும் காக்கப்படுவோம். எனவே தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருந்து, விழித்திருந்து, விசுவாசத்தில் உறுதியாய் இருந்து, பிசாசானவனுக்கு எதிர்த்து நின்று, தேவனுடைய கிருபையை மாத்திரமே சார்ந்திருந்து, இந்த கொஞ்ச கால பாடநுபவித்தலை கடந்துபோவோமாக. **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." (1 கொ 15:57)**, ஆமென், அல்லேலூயா.